**செ. கு. எண்**:42 **நாள்**:10.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10 .2.2013

சென்னை, நுங்கம்பாக்கம் பிரிவு தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தில், செயற் பொறியாளராகப் பணி புரிந்து வந்த திரு. மலர்வண்ணன் அவர்கள் 1.2.2013 அன்று தனியார் மருத்துவமனை ஒன்றில் புதிய மின் இணைப்பு தொடர்பான பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் திரு. மலர்வண்ணன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி காலமான தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் திரு. மலர்வண்ணன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**